# 13 மகோற்சவக் கிரியைகள்

கிரியை என்றால் செயல் எனப் பொருள்படும். மந்திரம் பாவனை, பக்தி ஆகியவற்றுடன் இணைந்த இறைவழிபாட்டுச் செயலே கிரியை என சைவ சமயத்தில் கூறப்படும். சிவாகமங்களில் கிரியாபாதம் என்ற பகுதி கிரியை பற்றிக் கூறுகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கிரியைகளை ஒழுங்குபடுத்தி பதினெட்டுச் சிவாச்சாரியார்கள் பதினெட்டுப் பத்ததிகளை உருவாக்கினார்கள். இப்பத்ததிகளே கிரியைகளை முறையாகவும் விளக்கமாகவும் கூறுகின்றன.



கிரியை ஆலயக் கிரியை, வீட்டுக் கிரியை என இருவகைப்படும். ஆலயக் கிரியை நித்தியக் கிரியை, நைமித்தியக் கிரியைகள் ஆகும்.

### அ. நித்திய கிரியைகள்

ஆலயங்களில் தினமும் நடைபெறும் கிரியைகள் நித்தியக் கிரியைகள் எனப்படும். ஆலயங்களில் வசதிக்கேற்ப ஒரு காலம் முதல் பன்னிரு காலம் வரை பூசைகள் இடம்பெறும்.

### ஆ. நைமித்திய கிரியை

நிமித்தம் என்றால் காரணம் எனப் பொருள்படும். நித்தியக் கிரியையில் ஏற்படும் குறைபாடுகளைப் போக்கவும், திருவருட் சக்தியைப் பெருக்கவும் நைமித்திய கிரியைகள் ஆற்றப்படுகின்றன. நைமித்திய கிரியை வாரம், நட்சத்திரம், திதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்படுகின்றது. உதாரணமாக: :- வார வழிபாடு - திங்கள், செவ்வாய், வெள்ளி விசேட பூசை நட்சத்திர வழிபாடு - கார்த்திகை, பூரம், திருவாதிரை, உத்தரம், மகம் திதிவழிபாடு - சதுர்த்தி, சஷ்டி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி, அமாவாசை

### இ. மகோற்சவம்

கொடித்தம்பம் நிறுவிய ஆலயங்களில் வருடத்துக்கு ஒரு மகோற்சவ முறை நடைபெறும். கொடித்தம்பம் இல்லாத ஆலயங்களில் செய்யப்படுவது அலங்கார உற்சவம் ஆகும். மகா + உற்சவம் = மகோற்சவம் மகா என்பது மேலானது என்றும் உற்சவம் என்பது உத்தமயாகம் என்றும் பொருள்படும். மகோற்சவம் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு செய்யப்படும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைக் குறிக்கும் என்பர்

## 1. படைத்தல்

கொடியேற்றமும் அதன் முன் நடைபெறும் மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, பேரிதாடனம், சமஸ்ததேவ



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

ஆவாகனம் போன்ற கிரியைகள் படைத்தல் தொழிலைக் குறிக்கும். கொடி மரம் - பதி, கொடிச் சீலை (கொடிப்படம்) பசு, இரண்டையும் இணைக்கும் மஞ்சட் கயிறு - திருவருட்சக்தி, தெற்பைக்கயிறு - பாசம் என்பவற்றின் குறியீடாகும். கொடித்தம்பத்தின் அருகில் கிரியைகள் நடைபெற்று உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவியைப் பாடி, வேதமந்திரங்களை ஓதி, திருமுறை பாராயணம் பண்ணி. தவில், நாதஸ்வரம், சங்கு, மணி என்பவற்றின் ஒலிகள் ஒலிக்க கொடித்தம்பத்தில் கொடியேற்றப்படும்.




கொடியேற்றத்தன்று மாலை ஆலயத்தின் வடகிழக்கு மூலையாகிய ஈசானத்திக்கில் உள்ள யாகசாலையில் கும்பங்கள் வைத்து ஓமகுண்டத்தில் அக்கினியை வளர்த்து, தினமும் பகல், இரவு ஆகுதிகள் வழங்கி பூசை செய்யப்படும். ஒன்பது திக்குகளிலும் பிரமா, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் ஒன்பது திக்குப்பாலகர்களையும் வரவழைத்து, அவர்களுக்கு விருப்பமான இராகம், பண், நைவேத்தியம் என்பவற்றை வழங்கி திசைக்காவலை முறையாக புரியும் வண்ணம் நியமிப்பர்.

மகோற்சவ நாட்களில் தினமும் காலை மாலை விசேட அபிஷேகம், பூசை, யாகம், கொடித்தம்பபூசை, அஸ்திரதேவர் வலம் வருதல், வசந்த மண்டப பூசை இறைவன் உள்வீதி, வெளிவீதியுலா, யாக சாலையில் பூரண ஆகுதி வழங்கல் என்பன நடைபெறும்.

## 2. காத்தல்

இரண்டாம் திருவிழாத் தொடக்கம் சப்பறத் திருவிழா வரையான வாகனத் திருவிழாக்கள் சிவனின் காத்தல் தொழிலைக் குறிக்கும். மகோற்சவ நாட்கள் ஆலயங்களுக்கேற்ப வித்தியாசப்படும். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் போன்றவற்றில் இருபத்தைந்து நாள் மகோற்சவம் நடைபெறுவதால் இருபத்திரெண்டு நாட்கள் வாகனத்திருவிழாக்கள் இடம்பெறும். வாகனத்திருவிழாக்களில் இடபம், யானை, மூசிகம், மயில், அன்னம், காராம்பசு, கிளி, ஆட்டுக்கடா, நாகம், கருடன் எனப் பல வாகனங்களில் இறைவன் திருவீதியுலா வருவார். மேலும் இத்திருவிழாக்களில் கைலாசவாகனம், மஞ்சம், முத்துச்சப்பறம், பூந்தண்டிகை, பூச்சப்பறம் என்பவற்றிலும் இறைவனை அலங்கரித்து வீதியுலாக் கொண்டு வருவர். ஏதாவது ஒரு நாளில் பக்தோற்சவமும் நடைபெறும்.

மஞ்சம் என்பது தேர் போன்று பல சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறப்பாகச் செய்யப் பட்டதாகும். இலங்கையில் இணுவில் கந்தசுவாமி கோயிலில் உள்ள மஞ்சம் உலகப் பிரசித்தி பெற்றதாகக் கூறப்படுகின்றது. முருகனின் ஆணைப்படி




அங்கு வாழ்ந்த சித்தர் சன்னாசி அப்பா என்பவரால் செய்விக்கப்பட்டது. கிட்டதட்ட நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

பக்தோற்சவம் என்பது பக்தர்களாகிய நாயன்மார்கள் திருவுருவங்கள் இறைவனைப் பார்த்தவாறு திருவீதியுலா வருவதாகும். இவ்வேளை அடியவர்கள் பன்னிரு திருமுறைப்பாடல்களைப் பாடி, வழிபட்டு வரும் உற்சவம் ஆகும். பல ஆலயங்களில் சமய குரவர் நால்வருமே வீதியுலா வருவர் முன்னேஸ்வரம், சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலயங்களில், அறுபத்துமூன்று நாயன்மார்கள், மாணிக்கவாசகர் திருவுருவங்களை அலங்கரித்து, வீதியுலாக் கொண்டு வருவர். தேரின் முதல்நாள் பெரிய சப்பறத்திரு விழாவும் சப்பறத்திருவிழாவிற்கு முதல் நாள் பூந்தண்டிகைத் திருவிழாவும் இத்தினத்தில் மாலை வேட்டைத்திருவிழாவும் (மிருக யாத்திரை) நடைபெற்று வருகின்றன. இறைவன் குதிரையில் சென்று கொடிய விலங்குகளை அழிப்பது போல் மனிதரிடமுள்ள தீய சக்திகளை அழிப்பதைக் குறிப்பது மிருக யாத்திரையாகும்.

## இ. அழித்தல்

தேர் அக்கினிச் சுடரின் வடிவத்தைக் கொண்டது. தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். அடியாரிடமுள்ள ஆணவ வலிமையைக் குறைத்தல் இவ்விழாவின் பாற்படும். அழித்தல் தொழிலைச் செய்த இறைவனைக் குளிர்விக்க பச்சை ஆடைகளுடன், நறுமணம் மிக்க இலை மாலைகளால் அலங்கரித்து, பன்னீர் தூவி வருவர். சுவாமி ஆலயத்துள் சென்றதும் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

சூர்ணோற்சவம் என்பது தீர்த்தத்தன்று காலை இறைவனுக்கு நீராட்டுவதற்காக மஞ்சட்பொடி இடித்தலாகும். இவ்வேளை மணிவாசகரின் திருப்பொற்சுண்ணப் பாடல்கள் பாடி இடித்தல் இடம்பெறும். தொடர்ந்து அக்கோயிலுக்குரிய திருமஞ்சனக் கிணற்றிலோ, தீர்த்தக் கேணியிலோ, ஆற்றிலோ, சமுத்திரத்திலோ தீர்த்தம் நடைபெறும். அதன் பின் யாகசாலையில் கொடியேற்றம் முதல் பூசிக்கப்பட்ட கும்ப நீரினால் இறைவனுக்கு அபிஷேகம் இடம்பெறும். அங்கு முளைக்க வைத்த நவதானியப்பயிராகிய யாகரட்சை எல்லோருக்கும் வழங்கப்படும்.

## ஈ. அருளல்

தீர்த்தோற்சவம் அருளலைக் குறிக்கும். கொடியிறக்கம், மௌனோற்சவம் ஆசாரிய உற்சவம், சண்டேஸ்வர உற்சவம் என்பன இவ்வுற்சவத்தில் இடம்பெறும். அன்றைய தினம் இறைவனுக்குத் திருவூஞ்சல் நடைபெற்று கொடித்தம்பத்தில் ஏற்றிய கொடி இறக்கப்படும். இவ்வேளை தெற்பைக்கயிறு கொடிச்சீலையுடன்

வரமாட்டாது. இது மலம் நீங்குவதற்கு அறிகுறியாகும். கொடிச்சீலையை இறைவனின் பாதத்தில் சேர்ப்பது ஆன்மா முத்தியாகிய அருளைப் பெறுவதைக் குறிக்கும். தொடர்ந்து இறைவன் வெளிவீதியுலா இடம்பெறும். அவ்வேளை திக்குப்பாலகர்களை நன்றி கூறி அவர்களுக்குரிய இடங்களுக்கு அனுப்புதல் நடைபெறும். பின்னர் உள்வீதியுலா இடம்பெறும். அவ்வேளை வேதம் ஓதல், திருமுறை பாராயணம், சங்கு ஓசை, மணி ஓசை, நாதஸ்வர ஓசை, தவில் ஓசை என்பன தனித்தனியே இடம்பெற்று பின் அடியார்கள் எல்லோரும் இறைவனின் மூல மந்திரத்தை தியானித்து மௌனமாக வருவர். ஈசானத்திக்கில் மீண்டும் எல்லா வாத்தியங்களும் ஒலிக்கப்படும்.

திருக்கோயில்களில் நமக்கு இறைவனிடமிருந்து பலனை பெற்றுத் தருபவர் சண்டேஸ்வரர். இறைவனுக்கு படைத்த பிரசாதம், அணிந்த மாலை என்பவற்றை சண்டேஸ்வரருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். சண்டேஸ்வரர் தனியே உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். இவ்வேளை அடியார்கள் சிதறு தேங்காய் உடைத்து, மகோற்சவ பலனைக் கேட்டு வணங்குவர். தொடர்ந்து தன்னைச் சிவமாகப் பாவித்து வேறு சிந்தனையின்றி மகோற்சவத்தை நிகழ்த்தும் சிவாச்சாரியாரை விழுந்து வணங்கி, அவருக்கு தட்சணை வழங்கி, சிவமாகவே இருக்கும் அவரிடம் திருநீறு பெற்று, ஆசிபெற்றுக் கொள்ள வேண்டும்.

மறுதினம் திருக்கல்யாணத் திருவிழா நடைபெறும். இதனை மணவாளக் கோலம் என்று இக்கிரியைகளை அறிந்தும் அவற்றில் பக்தியோடு வழிபட்டும் நற்பலன்களைப் பெறுவதோடு இறைவன் வீதிவலம் வரும் காலத்தில் சாம்பவதீட்சை தரிசிப்பவர்களுக்கு கிடைக்கின்றது. இதனால் மலம் நீங்கி, ஞானம் கிட்டும் முத்தி கைகூடும்.

## உ. மறைத்தல்

சூர்ணோற்சவம் (சுண்ணம் இடித்தல்) சுவாமி தீர்த்தமாடுவதற்காக வாசனைத்திரவியங்களை இடித்தல் சூர்ணோற்சவம் எனப்படும். இடிக்கப்பட்ட வாசனைப் பொடியைச் சுவாமிக்குச் சாத்தியபின் தீர்த்தம் ஆட்டப்படும்.

ஆன்மாவுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மாயா காரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்கள் நான் எனது எனும் செருக்கை எழுப்புவன. அவற்றைச் சக்தியால் இடித்துச் சுத்த சுண்ணமாக்கி இறைவனிடத்தில் ஒப்பிக்க அவர் மறைப்புத் தொழில் எனும் திரோபவத்தைச் செய்வார். இதனைக் குறிப்பதே சூர்ணோற்சவம் ஆகும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 🕮 பாடச் சுருக்கம்

- சிவாகமங்களும், அவற்றின் சார்பு நூல்களுமாகிய பத்ததிகளும் கிரியைகள் பற்றிக் கூறும் நூல்களாகும்.
- கிரியைகள் பல வகைப்படும். அவற்றில் நைமித்திய கிரியையில் விசேடமானது மகோற்சவம்.
- மகோற்சவம் என்பது மேலான உற்சவம் எனப்படும்
- மகோற்சவக் கிரியைகளை அறிந்து, அவற்றைப் பக்தியோடு வழிபட வேண்டும்.

## ✍ பயிற்சிகள்

**அ. சுருக்கமான விடை தருக.**

1. மகோற்சவம் என்பதன் பொருள் யாது?
2. கொடியேற்றத்திற்கு முதலில் நடைபெறும் கிரியைகளைத் தருக.
3. உங்கள் ஊரில் உள்ள மகோற்சவம் நடைபெறும் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் சுவாமி வீதிவலம் வரும் வாகனங்களை எழுதுக.
4. கொடியிறக்கத்தன்று நடைபெறும் கிரியைகளை ஒழுங்காக எழுதுக.
5. சிவோகம் பாவனை என்றால் என்ன?

### ஆ. தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 1. பதி | தேர்த்திருவிழா |
| 2. பாசம் | மஞ்சத்திருவிழா |
| 3. அழித்தல் | கொடித்தம்பம் |
| 4. இணுவில் கந்த சுவாமி கோயில் | கைலாசவாகனம் |
| 5. நயினை நாகபூசணி அம்மை | தெற்பைக்கயிறு |
| 6. முன்னேஸ்வரம் | பக்தோற்சவம் |

## ௐ செயற்பாடு

- தீர்த்தத் திருவிழா பற்றி ஐந்து நிமிட பேச்சொன்றை நிகழ்த்துக.
- கொடியேற்ற விழாவை அவதானித்து, கொடிப்படத்தில் காணப்படு பவைகளைப் பட்டியற் படுத்திக் காட்சிப்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக